பணிப்புரை இல. 41.

## 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டம்

12 (1) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் 12 (1) ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் செயற்படும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது, கீழே குறிக்கப்பட்டுள்ள தீக் குச்சிகள் அடங்கிய தீப் பெட்டிகளை (நெருப்பு பெட்டிகள்) உள்நாட்டில் உற்பத்தி செய்கின்ற உற்பத்தியாளர்கள், விநியோகத்தர்கள் மற்றும் வியாபாரிகள் இலங்கை தரக் கட்டளைகள் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட எஸ். எல். எஸ். (SLS) பண்டத்தரக்குறியீடு குறிக்கப்பட்டிருந்தாலன்றி, தீக் குச்சிகள் அடங்கிய தீப் பெட்டிகளை (நெருப்பு பெட்டிகள்) எவரேனும் உற்பத்தி செய்யவோ, விநியோகிக்கவோ அல்லது கொண்டு செல்லவோ அல்லது களஞ்சியப்படுத்தவோ அல்லது மொத்தமாகவோ அல்லது சில்லறையாகவோ விற்பனை செய்யவோ அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தவோ, விற்பனைக்காக வைக்கவோ அல்லது விற்பனைக்கு கோரவோ முடியாதென பணிப்புரை விடுக்கின்றது.

தீக் குச்சிகள் அடங்கிய தீப் பெட்டிகள் (நெருப்பு பெட்டிகள்) - எஸ். எல். எஸ். (SLS) 11

இப் பணிப்புரை 2012, யூன் 1 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கட்டளைப்படி,

ரூமி மர்சூக்,
தவிசாளர்.

கொழும்பு,
2012, சனவரி 25.

2- 391/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.